## ஆரம்ப பள்ளிக்கான ஒழுங்கு விதிமுறைகள் பற்றிய நகராட்சியின் சுற்றறிக்கை:

### அத்தியாயம் I: குறிக்கோளும், செல்லுபடியாகும் பகுதிகளும்:

§ 1. சட்ட வரையறுப்பு:

இச்சுற்றறிக்கை தொடக்கநிலை மற்றும் மேல்நிலை கல்விச் சட்டம் 17 - 7 - 1998 எண் 61, பிரிவு 2 - 9இன் பிரகாரம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

§ 2. குறிக்கோள்:

இந்த ஒழுக்க விதிமுறைகளின் குறிக்கோளாவது தொடக்க நிலை மற்றும் மேல் நிலை பாடசாலை மாணவர்களுக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி தருதல், நல்ல பழக்கவழக்கம் கற்றுத்தருதல், மாணவர்களின் சுகநலத்தை பேணிக்காத்தல் போன்றதாகும்.

§ 3. செல்லுபடியாகும் பகுதிகள்:

இந்த ஒழுக்க விதிமுறைகள் Lørenskog நகராட்சி எல்லைக்குள் உள்ள நகர சபையின் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு செல்லுபடியாகும். இந்த ஒழுக்க விதிமுறையானது பாடசாலையின் பாதுகாப்பில் மாணவர்கள் இருக்கும் பட்சத்தில், பாடசாலை வழியில் அவர்கள் நடைந்துகொள்ளும் முறை, பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு அயலில் உள்ள இடங்களில், கல்விச் சுற்றுலாக்களின் போது, பாடசாலையின் பொறுப்பில் சுற்றுலாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் போது செல்லுபடியாகும். பாடசாலை பின்னேற்பாடு (SFO) மற்றும் வீட்டுப்பாட உதவி ஏற்பாடு ஆகியவை பிரத்தியோகமான ஒழுக்க விதிமுறைகளை பெற்றோருக்கும், அவற்றிற்கு உரித்தான பாடசாலைக்கும் இடையில் ஒப்பந்தமிட்டு வைத்துக்கொள்வார்கள்.

இந்த நகரசபையின் ஒழுக்க விதிமுறைகள் பற்றிய சுற்றறிக்கைக்கு மேலாக, சில இயக்குநர் சபைகளுக்கு, பாடசாலையின் தேவைகளுக்கு பொருந்துமாறு இந்த விதிமுறைகளை மேம்படுத்திக்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. போதனா சட்டம், போதனா சட்டத்திற்கான சுற்றறிக்கை மற்றும் நகர சபையின் சுற்றறிக்கை ஆகியவற்றை பாடசாலையின் ஒழுக்க விதிமுறைகள் மீறமுடியாது. முரண்பாடுகள் ஏற்படும் பட்சம் ஒவ்வொரு பாடசாலையின் தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமாக தயாரிக்கப்பட்ட ஒழுக்க விதிமுறைளுக்கு மேலாக போதனாச்சட்டம், போதனாச்சட்டத்தின் சுற்றறிக்கை மற்றும் நகர சபையின் சுற்றறிக்கை என்பன செல்லுபடியாகும்.

பாடசாலை வருடம் ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் ஒழுக்க விதிமுறைகளை மாணவர்கள், பாதுகாவலர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் தெரிவிக்க வேண்டும். ஒழுக்க விதிமுறைகளை பாடசாலையின் ஆலோசனை குழுக்கள் விவாதித்து அத்தோடு பாடசாலையின் இணையதளத்தின் ஊடாக அவற்றை பிரசுரிக்க வேண்டும்.

### ஆத்தியாயம் - II. விதிமுறைகள்

§ 4. பொதுவான நடத்தையும், பழக்கவழக்கங்களும்.

**OPPVEKST OG UTDANNING**
Hasselveien 6, Postboks 304, 1471 Lørenskog. Telefon 67 93 40 00, Faks: 67 98 98 03, Org. nr. : 842 566 142 (mva)
postmottak@lorenskog. kommune. no, www. lorenskog. kommune. no

- பாடசாலையில் சாதாரணமான வளமைக்கு ஒன்றிய நடைமுறை பழக்க வழக்கங்களே செல்லுபடியாகும்.
- பாட நேரங்களில் குழப்பம் இல்லாத வண்ணம் அமைதி நிலவ வேண்டும். அத்தோடு, கற்பித்தலுக்கு மாணவர்கள் மதிப்பளிக்க வேண்டும், அத்தோடு ஆசிரியரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாணவர்கள் தம்மை நடத்திக்கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் அனைவரும்
  - பாடசாலை ஊழியர்களுக்கும் மற்றும் சக மாணவர்களுக்கும் மதிப்பளித்து கரிசனை காட்ட வேண்டும்.
  - பாடங்களுக்கு தம்மை தயார்படுத்திய வண்ணம் தகுந்த நேரத்திற்கு சமூகம் அளிக்க வேண்டும்.
  - கற்பிக்கும் போது ஆர்வம் காட்டி பங்களிக்க வேண்டும்.
  - வழங்கப்பட்ட கால வரையறைகளை கடைபிடித்து தனது திறனை மதிப்பீடு செய்யக்கூடிய வண்ணம் செயற்பட வேண்டும்.
  - நல்லதோர் ஒழுக்கத்தை கடைபிடித்தல்.
  - பாடசாலையின் உபகரணங்கள், கட்டிடங்கள், கற்பிக்கும் கருவிகள் ஆகியவற்றை பேணிப் பாதுகாத்து, ஒதுக்கப்பட்ட இடங்களில் குப்பைகளை வீசவும்.
  - வகுப்பறைகள் மற்றும் வெளித்தலங்கள் போன்றவற்றை சுத்திகரித்து ஒழுக்கம் செய்வதில் பங்களிக்க வேண்டும்.
  - பிரத்தியோக உடமைகளை தகுந்த முறையில் பராமரித்தல்.
  - பாடசாலைக்கு வந்து செல்லும் பொழுதும், வகுப்புடன் சுற்றுலா செல்லும் பொழுதும், போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
  - பாடசாலைக்கு மிதிவண்டியில் வந்து செல்லும் பொழுதும், பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலாக்களில் கலந்துகொள்ளும் பொழுதும் தலைக்கவசத்தை பாவிக்க வேண்டும்.

- பெறுமதிகளை சொந்தப் பொறுப்பிலேயே எடுத்துவர வேண்டும்.

- தடைவிதிக்கப்பட்ட விடயங்கள்

  - பாடசாலை அனுமதி வழங்காத பட்சம் சோடா மற்றும் மிட்டாசு போன்றவற்றை எடுத்து வருவது.
  - ஸ்கேட் போர்டு, சக்கர சப்பாத்து, உதை சக்கரவண்டி போன்றவற்றை பாடசாலையின் வளவிற்குள் பாடசாலையின் அனுமதியின்றி உபயோகித்தல்.
  - பனியில் சறுக்கி விளையாடும் உபகரணங்கள் பாடசாலையின் அனுமதியின்றி எடுத்து வருதல். பனிபந்து எறிந்து விளையாடுதல் குறிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே அனுமதிக்கப்படும்.
  - ஆபத்தான உபகரணங்களான கத்திகள், ஆயுதம் போன்ற உபகரணங்கள், தீக்குச்சிகள், தீமூட்டிகள் போன்றவற்றை எடுத்து வருதல்.
  - பாடசாலையின் கட்டிடங்கள் மற்றும் உடமைகள் அல்லது ஏனைய மாணவர்களுக்கு சேதங்களை உருவாக்கல்.
  - சோதனைகள் மற்றும் மதிப்பீட்டிற்கு உட்படும் வீட்டுப்பாடங்கள் போன்றவற்றில் கள்ளம் செய்தல், பிரதி செய்தல் போன்றவை.

## § 5. அவமதிக்கும் வார்தைகளும் செய்கைகளும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இழிவான செயற்பாடுகள் அல்லது வார்த்தைகளை உபயோகித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. இவ் அவமானத்திற்கு உள்ளாகும் நபர் இழிவானது என எதை அனுபவிக்கிறாரோ அச்செயற்பாடுகள் மற்றும் வார்த்தைகள் இதன் பொருட்டு அமையும். பாரதூரமான இழிவை ஏற்படுத்தும் நடத்தைகள் மற்றும் சொற்களுக்கு உதாரணங்கள்:

**வன்முறை**
நோக்கத்துடன் காயப்படுத்துதல் மற்றும் நோவை விளைவித்தல் அல்லது இழிவுபடுத்துதல் போன்றவற்றை மூற்கத்தனமான முறையில் உருவாக்குதல் வன்முறை எனப்படும். இவ்வாறான வன்முறை உடல் ரீதியானதாக அல்லது உள ரீதியானதாக இருக்கலாம்.

**மிரட்டல்கள்**
சுயமாக அல்லது இன்னொருவர் ஊடாக சமூக ஊடகங்கள் மூலமாகவோ அல்லது வாய்மொழி வாயிலாகவோ அச்சுருத்தலை ஏற்படுத்துதல்.

**ஏளனப்படுத்தல்**
ஒரு நபரை, நீண்ட காலமாக மீள்மையுடன் பாதகமான செயற்பாடுகளுக்கு தனிநபர் ஒருவர் இல்லையேல் பலர் சேர்ந்து உட்படுத்தினால், இவரை ஏளனத்திற்கு உட்படுத்துவதாக கணிப்பிடப்படும். இவ்வாறு ஏளனம் என கணித்துக்கொள்வதற்கு அதிகாரம் மற்றும் பலம் ஆகியவற்றில் ஓரளவு வேறுபாடு இருக்க வேண்டும்.

**பாரபட்சம் காட்டுதல்:**
உதாரணமாக இனம், பாலியல் வாழ்வு முறை, இயல்புத் திறன், மதம், நிறம், தேசிய மற்றும் இனப்பின்னணி ஆகிய காரணத்தினால் ஒரு மனிதனை இழிவாக நடத்துதல் அல்லது தொல்லைப்படுத்துதல் பாரபட்சம் காட்டுதலாக அமையும். இவ்வாறான பாரபட்சம் நேர்முகமாக அல்லது மறைமுகமாக அமையலாம்.

**இனவாதம்**
ஒருவரை அவரின் நிறம், தேசிய மற்றும் இனப்பின்னணி ஆகிய காரணத்தினால் பாரபட்சம் காட்டி அனுகுவது இனவாதம் ஆகும்.

## § 6. போதை வஸ்துக்கள்:

சாரயம், புகையிலை, மற்ற போதை வஸ்துக்கள் அல்லது ஏனைய போதை தரவல்ல பொருட்களை மற்றும் உடல் நலத்திற்கு பாதிப்பான பொருட்களை, பாடசாலையின் பிராந்தியத்திற்குள் அல்லது நிகழ்ச்சிகளில் மற்றும் பாடசாலையின் கட்டுப்பாட்டில் இடம் பெறும் சுற்றுலாக்களில், எடுத்துவருதல் அல்லது பாவித்தல் மற்றும் வியாபாரம் செய்தல் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளது.

## § 7. கைத்தொலைபேசி மற்றும் மின்தொடர்பு சாதனங்களை உபயோகப்படுத்துவதற்கான நெறிமுறைகள்:

கைத்தொலைபேசி எடுத்து வருவது ஒவ்வொருவது சொந்தப் பொறுப்பில் அடங்கும். அத்துடன், பாடசாலை பிராந்தியத்தில் இதை நிப்பாட்டி வைத்திருக்க வேண்டும். சக மாணவர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ பாதகம் விளைவிக்கும் வகையில் கைத்தொலைபேசியை உபயோகித்தல் தடையான

விடயம். பாட நேரங்களில் கைத்தொலைபேசியை உபயோகிப்பதற்கு பாடசாலை அனுமதி வழங்கலாம், ஆனால் இது பாடம் விடயமாக உள்ள தேவைக்கு மட்டுமே. இடைவேளைகளில் கைத்தொலைபேசியை உபயோகிக்கலாமா என்ற தீர்மானத்தை இயக்குநர் சபை வழங்கலாம். சக மாணவர்களை மற்றும் ஊழியர்களை புகைப்படம் பிடிப்பதற்கு மற்றும் வீடியோ பதிவு செய்துகொள்வதற்கு அவர்களது சம்மதம் அவசியம். சக மாணவர்கள் மற்றும் ஊழியர்களை கொண்ட வீடியோ பதிவுகள் மற்றும் புகைப்படங்களை வேறு இடத்திற்கு அனுப்புதல் அத்தோடு பிரசுரித்தல் ஆயின் இதற்கு அவர்களின் சம்மத உடன்படிக்கை அவசியம்.

பாடசாலையின் கணினி உபகரணங்கள், இணையதள தொடர்பு அத்தோடு மின்னஞ்சல் போன்றவை, பொறுப்பான ஆசிரியர் அது அவசியம் என கணிப்பிடும் பட்சத்தில், கற்பித்தல் விடயத்தில் மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும்.

பாடசாலையின் கணினி உபகரணங்களை எவ்வாறு மாணவர்கள் உபயோகிப்பது என்பது விடயமாக பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் இடையே ஓர் பாவனை ஒப்பந்தத்தையும் இணையதள பாவனை நன்னடத்தை நெறிமுறைகளையும் ஒவ்வொரு பாடசாலைக்கும் உரித்தான இயக்குநர் குழு தீர்மானிக்க வேண்டும். பாடசாலையின் கணினிகளுக்கான பாவனையாளர் பெயர் மற்றும் கடவுச்சொல் என்பன தனிநபர் உடமை என்பதால் இவற்றை இரகசியம் பேணிக்காக்க வேண்டும். பிற நபர்களின் கடவுச்சொல்லை உபயோகித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

### § 8. பாடசாலை வராமை

பாடசாலை வராமையின் போது அதே தினம் பெற்றோர் பாடசாலைக்கு தகவல் வழங்க வேண்டும்.

பாதிப்பு ஏற்பாடாது என்று கருதும் பட்சத்தில், மாணவரின் கல்வி பயிலும் கடமையில் இருந்து இரண்டு வாரங்கள் வரை நகர சபை விடுமுறை வழங்கலாம். இவ்வாறான விடுமுறைக்கு தகுந்த காலத்திற்கு முன்னரே பெற்றோர் இது விடயமாக விண்ணப்பிக்க வேண்டும். இவ்வகையான அனுமதியுடனான விடுமுறையின் போது அவசியமான கல்வியூட்டல் வழங்குவதை பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும். போதனாச் சட்டம் § 2 - 11யின் பிரகாரம், நோர்வே நாட்டின் கிறிஸ்துவ மதத்தைவிட வேறு மதத்தை சார்ந்த மாணவர்கள் அவர்களது மத சார்பான பெருநாட்களை ஒட்டி பாடசாலையில் இருந்து விண்ணப்பத்தின் அடிப்படையில் விடுமுறை பெறுவதற்கு உரிமையை கொண்டுள்ளனர்.

## அத்தியாயம் III. எதிர்நடவடிக்கைகள்

### § 9. எதிர்நடவடிக்கைகள் பற்றி பொதுவாக

ஒழுக்க விதிமுறைகளை மீறுவதால் எதிர் விளைவுகள் ஏற்படலாம் மாணவரின் நடப்பு விதத்திற்கும் பாடசாலை வழங்கும் எதிர் நடவடிக்கைக்கும் இடையில் ஓர் தகுந்த ஒருமைப்பாடு இருக்க வேண்டும். சம்பவம் எவ்வளவு பாரதூரமானது மற்றும் எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை மறுதலிக்கிறது என்பதை பாடசாலை எவ்வாறு கணிப்பிடுகிறது என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அடிப்படையாகக் கொண்டு எதிர்நடவடிக்கையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். உடல் ரீதியான கண்டனமோ இல்லையேல் ஏனைய இழிவுபடுத்தும் செயற்பாடுகளையோ உபயோகிக்கப்படக் கூடாது. ஒரு குழு மாணவர்களில் சில மாணவர்கள் இழைத்த தவறுக்காக மாணவர்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக கண்டிப்பதற்கு அனுமதி இல்லை. வழங்கப்பட்ட எதிர் நடவடிக்கைகளை ஏற்று பின்பற்றுவதற்கு

மாணவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். இவர்கள் இதை பின்பற்றாவிடில் மேலதிகமாக எதிர்நடவடிக்கைகள் விதிக்கப்படலாம்.

ஓர் மாணவன் தனக்கு அல்லது ஏனையோருக்கு காயத்தை ஏற்படுத்துவார் என்ற ஓர் அவசர கால சூழ்நிலையில், இந்த மாணவனை தடுத்து நிறுத்துவது அவசியம். தேவை ஏற்படின் இம்மாணவனை இவரது குழுவில் இருந்து அகற்றி கண்காணிப்புடன் ஒரு பிரத்தியோக அறையில் குறுகிய காலத்திற்கு இடப்படலாம். இவ்வாறான ஓர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இதை அதிபருக்கும் பெற்றோருக்கும் உடனடியாக அறிவிக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கையை பாடசாலை மாணவரின் பதிவுக்கோப்பில் ஆவணப்படுத்தி கல்வி இலாகா அதிபதிக்கும் தெரிவிக்க வேண்டும்.

**எதிர்நடவடிக்கைகள்**

- ஆசிரியரோ அல்லது பாடசாலையின் ஏனைய ஊழியர்களோ மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்கலாம்.
- எழுத்து மூலமான அறிவிப்பை மாணவனுடன் அவரது வீட்டிற்கு அனுப்பப்படலாம்.
- மாணவனை தன் தவறுகளை தொலைபேசி மூலம் வீட்டிற்கு தெரிவிக்க செய்யலாம்.
- மாணவன் தான் செய்த தவறுகளை பாடசாலையின் நிருவாகத்துடன்/ வகுப்பு ஆசிரியருடன்/ சமூகப்பழக்க ஆசிரியருடன்/ மற்ற அலுவலர்களுடன்/ பாடசாலையில் உள்ள பெரியவர்களுடன் அத்தோடு / சம்பவத்தில் ஈடுபட்ட தரப்பினருடன் உரையாடலுக்கு உட்படுமாறு மாணவன் பணிக்கப்படலாம்.
- பாடசாலையும், மாணவனும் இருதரப்பினருக்கும் கடமைகளை கொண்ட ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கலாம்.
- மாணவன் எடுத்துவந்த ஒரு பொருளை அன்றைய தினம் முழுவதும் அவரிடமிருந்து பறிமுதல் செய்து அவ்வுபகரனத்தை அன்றே மாணவரின் பாதுகாவலரிடமோ அல்லது காவல் துறையிடமோ ஒப்படைக்கலாம்.
- மாணவரின் இடைவேளை தனிப்பட்ட முறையில் கட்டுப்படுத்தப்படலாம்.
- மாணவனை வேறு வகுப்பிலோ அல்லது சுய வகுப்பிற்கு வெளியில் வேறு நடவடிக்கைகளிலோ இடலாம்.
- மாணவர் தவற விட்ட பாட நேரங்களை மீளப்பெறுவதற்கும் மற்றும் ஏனைய மாணவர் நலன் கருதியும், பாடசாலை ஆரம்பத்திற்கு முன்னரும் படசாலை நேரத்திற்கு பின்னரும் பாடசாலையில் சமூகம் அளிக்க வேண்டும் என பணிக்கப் படலாம்.
- அதிபர் பலனளிக்கும் என கருதும் பட்சத்தில் ஏனைய நல்வசதி ஏற்பாடுகள் நிறுத்தப்படலாம்.
- மாணவனை ஓர் குறுகிய காலம் வரை அவரது வகுப்பில் இருந்து பிரித்து வேறு ஓர் இடத்தில் கண்கானிப்புடன் அவசியம் ஏற்படின் கற்பித்தலுடன் வைத்திருக்கும் தீர்மானத்தை அதிபர் வகுக்கலாம்.
- மாணவன் சுயமாகவே தனக்கோ அல்லது ஏனையோருக்கோ இழைத்த சேதங்களை சீர்திருத்தி, சுத்திகரித்து, ஒழுங்கமைத்து விட வேண்டும்.
- நஷ்டயீட்டு சட்டம் §1 - 1, மற்றும் நஷ்டயீட்டு சட்டம் §1 - 2 ஆகியவற்றின் பிரகாரம் மாணவரின் பாதுகாவலர்கள் Kr. 5 000 வரை பொறுப்பாளிகளாக கொள்ளப்படலாம்.
- 8 - 10 வகுப்பிற்கு உட்பட்ட மாணவர்களின் நன்னடத்தை மற்றும் / அல்லது ஒழுக்கம் ஆகியவற்றிற்கான தரங்கள் குறைக்கப்படலாம்.

- ஓர் மாணவன் பரிட்சை மோசடி பற்றிய விதிமுறைகளை மீறினால் பரிட்சையின் பதில்கள் இரத்து செய்யப்பட்டு நன்னடத்தைக்கான தரம் குறைக்கப்படும்.
- ஒரு மாணவர் அதிகப்படியான வரவின்மையைக் கொண்டிருந்தால் அத்தோடு குறிக்கப்பட்ட மதிப்பீட்டு தேர்வுகளுக்கு சமூகம் அளிக்காது விட்டால், இதன் விளைவாக குறிப்பிட்ட பாடத்தில் தகுந்த தரத்தை மதிப்பிடுவதற்கான அடிப்படை குன்றுவதோடு மேலும் தவனைக் கால சித்தி மதிப்பீடுகள் அல்லது கணிப்பீட்டு மதிப்பீடுகளுக்கான காரணங்கள் இல்லது போய்விடலாம்.
- ஒழுங்கு நடைமுறை மீறப்படும் பட்சத்தில் இதை நகர சபை காவல் துறைக்கு புகாரிடலாம்.

**வெளியேற்றுதல்**

- 1 - 7ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள், பாரதூரமான அல்லது மறுதலிப்பு கொண்ட முறையில் தவறுகளை செய்து வந்தால் இவர்களை குறிப்பிட்ட பாடநேரத்திலோ அல்லது அன்றைய தினம் பூராகவோ பாடத்தில் இருந்து வெளியேற்றலாம். அன்றைய முழு தினம் மாணவர் ஒருவரை பாடத்தில் இருந்து வெளியேற்றுவதாயின் இதை நடத்துவதற்கு முன்னர் இவ்விடயம் பாதுகாவலர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
- 8 - 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் பாரதூரமான அல்லது மறுதலிப்பு கொண்ட முறையில் விதிமுறைகளை மீறினால் இவர்களை 3 நாள் வரை வெளியேற்றம் செய்யலாம். மாணவரின் ஆசிரியருடன் கலந்துரையாடிய பின்னர் அதிபரே இவ்வகையான வெளியேற்றலை தீர்மானித்துக்கொள்ளுகிறார். இவ்வகையான ஒரு தீர்மானம் வகுக்கப்படுவதற்கு முன்னர் வேறு உதவி ஏற்பாடுகள் அல்லது எதிர் நடவடிக்கைகள் ஆராயப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு, சம்பந்தப்பட்ட மாணவர் வாய் மூலமாக தனது கருத்தை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். பாதுகாவலர்களுக்கு அறிவிக்க வேண்டும்.
- அதிகபட்சம் 2 மணி நேரம் வரை வெளியேற்றுவது என்ற தீர்மானம் நிருவாக சட்டம் § 2இன் பிரகாரம் ஓர் தனி நபர் விடயத் தீர்மானமாக கணிப்பிடப்பட மாட்டாது. இதன் காரணத்தால் இத்தீர்மானத்தை மேல் முறையீடு செய்ய முடியாது. 2 மணி நேரத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு மாணவரை வெளியேற்றுவது என வகுக்கப்படும் முடிவு ஓர் தனி நபர் விடய முடிவாக கணிப்பிடப்படும். அதன் பிரகாரம், இதை மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.
- மாணவர் வன்முறை பாவிக்கும் பட்சத்தில் வெளியேற்றம் செய்வதற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், போதனாச் சட்டம் § 2 - 10இன் பிரகாரம் இவரை வெளியேற்றம் செய்யலாம். மாணவர்களை வெளியேற்றம் செய்வதற்கு முன்னர், ஏனைய எதிர் நடவடிக்கைகளை ஆராய்வது பாடசாலையின் கடமை. இது விடயமான தீர்மானம் ஓர் தனிநபர் விடயத் தீர்மானமாக அதிபரால் எடுக்கப்படும். இத்தனிநபர் விடயத் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னர் சம்மந்தப்பட்ட மாணவன் வாய்மூலமாக இவ்விடயம் பற்றி அதிபருக்கு விளக்கம் அளிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். மாணவர் / பெற்றோர் இது விடயமாக மாவட்ட ஆளுநரிடம் மேல் முறையீடு செய்யும் உரிமையை கொண்டுள்ளனர்.

**போதனா சட்டம் § 8 - 1யின் பிரகாரம் வேறு பாடசாலைக்கு மாற்றுவது**

- ஏனைய மாணவர்களின் நலன் பேணும் நோக்குடன், விசேட சந்தர்பங்களில், ஓர் மாணவனை தனது அருகாமையில் உள்ள பாடசாலையில் விட்டு வேறு ஒரு பாடசாலைக்கு மாற்றலாம்.
- மாணவனை வேறு பாடசாலைக்கு மாற்றுவது என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் ஏனைய நடவடிக்கைகள் முயற்சிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவசியம் ஏற்படின் நகர சபைக்கு வெளியில் உள்ள ஓர் பாடசாலைக்கு கூட மாணவரை இடமாற்றம் செய்யலாம். இருந்த போதும் இதனால்

மாணவன் தனது இல்லத்தில் இருந்து இடம் பெயர வேண்டிய நிலையோ அல்லது நியாயமற்ற நீண்ட நேர பாடசாலை பயணமோ ஏற்படக் கூடாது.

**பாடசாலையின் இணையதள தொடர்பு மற்றும் கணினிகளை பாவிக்கும் விதிமுறைகளை மீறுபட்சம்.**

- இணையதள பாவனை பற்றிய பாடசாலையின் விதிமுறைகளை மீறும் பட்சம், அத்தோடு பிற நபர்களின் பாவனையாளர் பெயர் / கடவுச்சொல் ஆகியவற்றை துஷ்பிரயோகம் செய்தால் பாடசாலையின் கணினிகளை பயன்படுத்தும் உரிமை குறிபிடப்பட்ட காலத்திற்கு பறிக்கப்படும். கணினி பாவனை பாடக் கற்பித்தலுக்கு அத்தியாவசியம் எனில் இவ்வெதிர் நடவடிக்கை கையாள முடியாது.
- விதிமுறைகள் மீறப்படும் பட்சத்தில் நகர சபை இவ்விடயத்தை காவல் துறையிடம் புகாரிடலாம்.

**அத்தியாயம் IV. விடயக்கையால்வு**

தீர்மானங்கள் வகுக்கப்படும் பட்சம் கீழுள்ள விடயக் கையாள்வுக்கான விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- விடயம் தகுந்த முறையில் விவரிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கும் கடமை பாடசாலைக்கு உண்டு, மேலும் இது எவ்வாறான விடயம் மற்றும் விடயத்தின் பாங்கு என்பவற்றின் அடிப்படையில் எடுக்கப்படும் அந்த முடிவு, ஓர் தகுந்த முடிவா என்பதையும் பாடசாலை ஆராய வேண்டும்.
- விடயத்தில் ஒரு தீர்மானத்தை வகுப்பதற்கு முன்னர், சந்தர்ப்பம் இருப்பின் சம்மந்தப்பட்ட மாணவருக்கு அறிவித்து அத்தோடு இவ்விடயத்தில் உள்ள அர்த்தமுள்ள தகவல்களை முன்வைத்து இதுவிடயமாக மாணவன் தனது கருத்தை முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். பாரதூரமான விடயங்களில் பாதுகாவலர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும். அறிவுறுத்தல் சாதாரணமாக வாய் மூலம் வழங்கப்படலாம். இருந்த போதும் விசேட அர்த்தம் கொண்ட தீர்மானங்களை எடுக்கும் போது அதற்கான காரணத்தை சாதாரணமாக எழுத்து மூலமாக வழங்க வேண்டும்.
- தீர்மானங்கள் எப்போதும் காரணம் காட்டப்பட வேண்டும். தீர்மானத்தை பற்றி மாணவருக்கு அறிவிக்கும் அதே பட்சத்தில் அதற்கான காரணத்தையும் வழங்க வேண்டும். விசேட காரணங்களால் இது இயலாது போனால் இதற்கு விதிவிலக்கு அளிக்கலாம். காரணம் பற்றிய விளக்கம் வாய் மூலமாக வழங்கப்படலாம். இருந்த போதும் விசேட அர்த்தம் கொண்ட தீர்மானங்கள் பற்றிய காரணங்களை வழங்குதல் எழுத்து மூலமாக அமைய வேண்டும்.
- கற்பித்தலை நடைமுறை படுத்தும் நோக்கத்துடன் நடத்தப்படும் தாக்கம் குன்றிய நடவடிக்கைகள் ஒழுக்கத்திற்கான மற்றும் கற்பித்தலுக்கான மேம்பாட்டு நடவடிக்கைகளாக கணிப்பிடப்பட வேண்டும். இவ்வகையான செயற்பாடுகளுக்கு தனிநபர் விடயத் தீர்மானம் என்பது அவசியம் இல்லை.
- மாணவரின் உரிமைகளை, கடமைகளை கட்டுப்படுத்தும் வகையில் ஓர் தீர்மானம் அமையுமாக இருந்தால் அவ்விடயத்தில் ஓர் தனிநபர் விடயத் தீர்மானம் வகுத்துக்கொள்ளுதல் அவசியம்.

**அத்தியாயம் V. அமுல்படுத்துதல்**

இந்த சுற்றறிக்கை நகராட்சி மன்ற விடயம் 159/12 திகதி 19. 12. 2012 அன்று தீர்மானிக்கப்பட்டது. இச்சுற்றறிக்கை 01. ஜனவரி 2013இல் இருந்து அமுல்படுத்தப்படும்.